கைதுசெய்யப்பட்டோரில்

# "ஐவர்நிலை மோசமாக இருந்ததால் அவர்கள் கூட்டிவரப்படவில்லை"

## - பிராந்திய தளபதி கிட்டு

விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 பங்குனி 10 றஜபு 23 இதழ் 40

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-3-1987

யாழ்ப்பாணம், செவ்

தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்து எம்மீது ராணுவத்தினரால் தாக்குதல்கள் நடத்தப் பட்டபோதும், அவற்றையும் நாம் சமாளித்து முன்னேறியே யாழ். பொலிஸ் விடுதிமீது தாக்குதல் நடத்தி பதின்மூன்று இராணுவத்தினரையும் பொலிசாரையும் அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

இவ்வாறு நேற்று அதிகாலை 1-15 மணிக்கு யாழ். பொலிஸ் விடுதிமீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

தளபதி கிட்டு இத்தாக்குதல் பற்றி தகவல் தருகையில் மேலும் கூறியதாவது:

கைது செய்யப்பட்ட பதின்மூன்று பேரில் ஐவரின் உடல் நிலை மோசமாக இருந்தது] எனவே அவர்களை அங்கேயே கைவிட்டுவர நேர்ந்தது. மற்றைய எட்டுப்பேரையும் வெளியே கொண்டுவந்து பாதுகாப்பாக வைத்திருக்கிறோம்.

அரசஇராணுவத்தினர்பாடசாலைகள் நூல் நிலையங்கள் கோவில்கள் என்பவற்றைத் தாக்கி தமது சுயரூபத்தினை உலகத்திற்கு காட்டி வருகின்றார்கள் ஆனல் நாம் நிதானமாக நடக்கிறோம் என்பதனை இத்தாக்குதலின் மூலம் அவர்கள் உணர்ந்துகொள்ளட்டும். நாம் நினைத்திருந்தால்

(5-ம் பக்கம் பார்க்க)

# சேருநுவரவில் இனந்தெரியாத ஆயுத நபர்களின் தாக்குதலில் 26 பேர் பலி

யாழ்ப்பாணம், செவ்

கிழக்குமாகாணத்திலுள்ள சேருநுவர கிராமத்தில் நேற்று அதிகாலை இனந்தெரியாத ஆயுத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஊர்காவற்படையினர் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர்.

ஹொரவப்பொத்தானையிலிருந்து திருமலைப் பக்கமாக 2' மைல் தூரத்தில் இக்கிராமத்தில சிங்களமக்கள் வாழுகின்றனர். இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 5 பிள்ளைகள், 8 பெண்களும் அடங்குவார்கள்.

தாக்குதல் நடத்தியபின்னர் தாக்குதல் நடத்திபோர் திரும்பிச் செல்கையில் ஊர்காவற்படையினர் குறுக்கிட்டனர் இக்கோஷ்டி அவர்கள்மீது தாக்குதல் நடத்தியதாகவும், அத்தாக்குதலில் ஒரு ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிகிறது. [ஊ]

● இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக

# ராஜீவ் - அரசியல் விவகார குழு இரு கட்ட ஆலோசனை

### இன்று கொழும்பு திரும்புவார்

கொழும்பு, திங்கள்

இந்தியப்பிரதமரின் விஷேட செய்தியுடன்நேற்று கொழும்பு வருவாரென எதிர்பார்க்கப்

(5-ம் பக்கம் பார்க்க)


(புதுடில்லி)

**இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மத்திய அமைச்சின் அரசியல் விவகாரக்குழுவுடன் நேற்று இருதடவைகள் உயர்மட்ட ஆலோசனை நடத்தினர். ஸ்தம்பிதம் அடைந்துள்ள பேச்சுவார்த்தைகளை எவ்வாறு ஆரம்பிப்பது, போர் நிறுத்தமொன்று அமுல் செய்யப்படுவது ஆகிய விடயங்களே இக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டதாக தெரியவருகிறது**

இந்த உயர் மட்ட ஆலோசனைக்கூட்டத்தின் முதற்கட்டம் காலையிலும், இரண்டாவது கட்டம் மாலையிலும்நடைபெற்றது.

பல சிரேஷ்ட அமைச்சர்கள், இணையமைச்சர்கள், வெளிவிவகாரத்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் இலங்கை அரசின் ராணுவ, பொருளாதாரத்தடை நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணமளிப்பது தொடர்பாக எழுந்துள்ள புதிய பிரச்னைகள் பற்றியும் ஸ்தம்பிதமடைந்துள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது. அதன் முதற்கட்டமாக போர் நிறுத்தமொன்றை அமுல்செய்வது ஆகிய விடயங்

(5-ம் பக்கம் பார்க்க)



யாழ். நகரில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஷெல் தாக்குதலினல் சேதமடைந்த சிலவீடுகள்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமணத் திருமுகம்

காலம்: 25-03-1987 புதன்கிழமை காலை 9-30 மணி முதல் 11-30 மணி வரையிலான சுபவேளை.

மணமகன்: செல்வராஜா ஜெயானந்தராஜா

மணமகள்: உமாமகேஸ்வரி சண்முகநாதன்

மங்கலநாண்பூணல்: வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானம், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 26-03-87 மாலை 3 மணிக்கு நடைபெறும்.

இரு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இரு வீட்டார் அழைப்புகள்

வ. செல்வராஜா பத்தர் தம்பதிகள், மகாஜனக்கல்லூரி வீதி, தெல்லிப்பழை.

க. சண்முகநாதன் பத்தர் தம்பதிகள், 23,கேசாவில் பிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம், (வேலணை).

[சி-8177] (ச. வெற்றிவேல் மணமகனின் சகோதரன்)

## "ராணுவ விஸ்தரிப்பு முயற்சியை முறியடிக்கும் முதற்படி"

### — விடுதலைப்புலிகள் அறிவிப்பு

யாழ் செவ்

யாழ் குடாநாட்டில் நகர முடியாத நிலையிலுள்ள ராணுவம் தனதுமுகாம்களின் எல்லைகளை விஸ்தரி குமுகமாக முகாம்களைஅண்டியபகுதிகளில்மினி முகாம்களை அமைத்து வருகிறது.ராணுவத்தின் இந்தமுயற்சிகளைக் கட்டுப்படுத்துமுகமாக முதல் முயற்சியாக கோட்டை முகாமருகேயுள்ள பொலிஸ் விடுதி எம்மால் முற்றுகையிடப்பட்டு தாக்கப்பட்டது.

5-ம் பக்க. பார்க்க)

### விண்வெளிக்கோள் இன்று செலுத்தப்படும்

சென்னை, மார்ச் 24

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விண்வெளிக் கோள் ஒன்று இன்று நண்பகல் ஸ்ரீ ஹரிக்கோட்டா விலிருந்து

(5-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திடம்கைப்பற்றிய நவீன ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ் பொலிஸ் விடுதி இராணுவ முகாமை தாக்கி உட்புகுந்த விடுதலைப் புலிகள் இராணுவத்தினரின் நவீன ஆயுதங்கள் பலவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

ஏ. கே. ஜி. பி. எம். ஒன்று ஏ. கே. ரக றம் மகஜீன்

(5-ம் பககம் பார்க்க)

## கைதான படையினர்

யாழ்ப்பாணம், செவ்

பொலிஸ் விடுதித் தாக்குதலில் கைதான ராணுவத்தினர் இவர்கள்தான்.

உப சாந்த குணதுங்க, பாலித்த கருணதிலக, அமரசேன. சிறிகுமார, சந்திரசிறி, பக்கமிவெவ, உபேவன்சே, திலகுமார ஆகியோர்.

இவர்களனைவரும் தற்போது புலிகளின் பாதுகாப்பில் உள்ளனர். (ஊ)

## நால்வர் பலி

யாழ்ப்பாணம், செவ்

யாழ். பொலிஸ்விடுதி இராணுவமுகாம் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் வீரமரணமடைந்தநான்கு புலிகளின் விபரம் அருண், ராஜ் மோகன், பண்டிதர், கில்மன்.

களத்தில் தீரத்துடன் போராடி மரணித்த நான்கு தியகப் புலிகளுக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ஞ)

## ஹெலி, பொம்மர்மீது விமான எதிர்ப்பு ஆயுதத்தால் புலிகள் தாக்கினர்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்.பொலிஸ் விடுதியில் நிலைகொண்டிருந்த ராணுவத்தினர் மீது தமிழீழவிடுதலைப் புலிகள் நேற்றுஅதிகாலைநடத்திய தாக்குதலையடுத்து யாழ். நகர்மீதுதாக்குதல்நடத்தவந்த

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். சி-8056

இறக்குமதி செய்யப்பட்ட Honda C D 125, C D 90, C B 50, C 50 Chaly C50 (Raccon) றக்கூன் முதலியவை எம்மிடம் விற்பனைக்குண்டு. சம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ் 26 B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (சி-8125)

Hy-Line (ஹை-லைன்) வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் முழுப்பணம் செலுத்தி ஒரு வாரத்துக்குள் பெற்றுக்கொள்ளலாம். விலை 15/- சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-8145

TOEFL பயிற்சிப் புத்தகங்கள் Section II, III கிடைக்குமிடம்: S. B. IYAR, 12, வைமன் வீதி. நல்லூர். [சி-7796]

அளவெட்டி கூட்டுறவாளர் வீதி, M. P. C. S அருகாமையில் 6 பரப்புக்காணி சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ந. கணேஸ்வரி, அளவெட்டி வடக்கு. சி-8162

வீட்டுத்தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், Baby Cot, ஹோல் செற் கட்டில் மெத்தைகள், கசற் றேடியோக்கள், சாப்பாட்டு மேசைகள், கிளாஸ் வகைகள், பித்தளை பெரிய குத்துவிளக்குகள், Oven, கிடாரம், சிங்கர் தையல் மெஷின், சிறிய பெரிய கபேட், Show Case, Toster, கண்ணாடி மேசைகள், Tools Sets, Pressure Cooker, Wall Clocks, அயன் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென். பற்றிக் சந்தியருகில். (சி8088)

## சேவை

யூனிபோ [Unnifo] உருக்கு அலுமாரிகள், மேசைகள் மற்றும் ஆபீஸ்/வீட்டுத் தளபாடங்களை வாடிக்கையாளர்கள் தற்போது உரும்பராய் வேம்பன் வீதியில் உள்ள யூனிபோ தொழிற்சாலையில் நேரடியாகவே பெற்றுக் பெற்றுக் கொள்ளலாம். விசேட ஆடர்களும் ஏற்கப்படுகின்றன. பொதுமுகாமையாளர், யூனிபோ நிறுவனம் (Unnifo), வேம்பன் வீதி, உரும்பராய். (சி: 7614)

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம் நீர் முதலிய வசதிகளோடு நான்கு அறைகளுக்குக் குறையாத வீடு வாடகைக்குத் தேவை. சி-8154 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். சி-8154

புடவைக் கடையில் வேலை செய்ய ஆண் விற்பனையாளர் தேவை. வயது 20 தொடக்கம் 30 வரை. விபரங்களுக்கு; கணேசன்ஸ் 9, நவீன சந்தை சுன்னாகம். சி-8150

## வகுப்புக்கள்

A/L 89,88 கலை, வர்த்தக வகுப்புகள்; O/L 87 பகல்நேர வகுப்பு 21-03-1987. ஆரம்பமாகியது. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. [சி-8068]

108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் செவ்வாய் (24-03-87) 5-15 p. m. செவ், வியா, வெள்ளி 5-15 p. m. புதிய மாணவர்கள் செவ்வாய் 24-03-87 4 p. m. ஆரம்பமாகும். சி-8159

Radio-TV, Air conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங் தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவு ஆரம்பமாகின்றது. பட்டதாரி ஆசிரியர்களால்கற்பிக்கப்பட்டு London பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். [சி-8164]

## THANKS GIVING

My grateful thanks to Holy St. Jnde, Apostle and Martyr for the great favour granted. publication as promised.

VATHSALA.

(C-8096)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிரத்தியேக தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து வகுப்புக்கள்

இடம்: 'இராஜஸ்தான்' தபால் கந்தோரடி, நெல்லியடி.


ஆரம்பம்: 4-4-87 சனி.

2-00 மணி: ஆங்கிலச் சுருக்கெழுத்து (ஆரம்பத்திலிருந்து)
3-00 மணி தமிழ் சுருக்கெழுத்து (ஆரம்பத்திலிருந்து)
4-00 மணி ஆங்கிலச் சுருக்கெழுத்து (பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவிருக்கும் மாணவருக்கான 32 மணி நேரப் பயிற்சி)
5-00 மணி: ஆங்கில சுருக்கெழுத்து மீட்டல் வகுப்பு.

இலவச அறிமுகக் கருத்தரங்கும் ஆலோசனைகளும் பதிவுகளும் 28-3-87 சனி பி. ப. 4-00 மணி.

(சி 8173)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**S. A. கொன்ஸ்ரன்ரைன்**

உதிர்வு: 25-03-86

எங்கள் உள்ளங்களில் என்றும் வாழும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக 25-03-87ல் சில்லாலை கதிரை மாதா ஆலயத்திலும், பண்டத்தரிப்பு பத்திமா மாதா ஆலயத்திலும், 26-03-87 இல் யாழ்ப்பாணம் அடைக்கல மாதா ஆலயத்திலும் காலை வேளை ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிகளிற் பங்குபற்றி இவருக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். குடும்பத்தினர். சில்லாலை. (சி 8169)

## 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சோதி அரியரட்ணம்**

மறைவு: 25-03-1975

பரகதியில் வாழ்க
அன்னமெனஅமுதூட்டும்
வன்னமணிக் கரங்கள்,
அன்புதிர மொழிகின்ற
அரிய பணிமொழிகள்,
புன்னகையின்
சோதியெழில்
பூத்த மலர் வதனம்,
பொறுமை வழி
துயரங்கள்
பொறுக்கின்ற மனது.
மின்னலெனக்
காட்டியெமை
மறந்தாயே அம்மா,
மேலோனைக்கண்டுதொழ
மறைந்தாயே தாயே,
பன்னிரண்டாம்
ஆண்டிங்கு
பசுமை நினைவோடு,
பாதமலர் தூவுகிறோம்
பரகதியில் வாழ்க!

சுற்றத்தாரையும், நண்பரையும் 25-03-1987 புதன்காலை 6-15 மணிக்கு யாழ். ஆசனக்கோவிலில் நடைபெறும் திருப்பலியில் பங்கு பற்றுமாறு பணிவன்புடன் வேண்டும்:

T. A. அரியரட்ணமும்,
பிள்ளைகளும்.
21, பிளச்சர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (சி 8170)

## "50 ஓவர்" போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 3-வது வருடமும் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 3வது வருடாந்த 'மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்' கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி 9 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 46ஓவர்களில் 9 விக்கெட்டுகளைஇழந்து 161ஓட்டங்களைப் பெற்றது. குலசிங்கம் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 63 ஓட்டங்களைப் பெற்றார் சவுந்தரநாயகம் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், செந்தூர்வாசன் 43ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி 42 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. ஆர். மோகனதாஸ் 42 ஓட்டங்களையும், பி. ஆதவன் 33 ஓட்டங்களையும் பெற்றனர் மேற்படி இருவரும் சேர்ந்து 6வது விக்கெட் சோடியாகச் சேர்ந்து 69 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. நித்தியரஞ்சன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார் இப்போட்டி சென். பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

3வருடங்களாக நடைபெற்று வரும் இப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியே தொடர்ந்து வெற்றிபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (வி)

## யாழ். பல்கலைக்கழக 'டேபிள்டெனிஸ்' போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் யாழ் மாவட்ட ரீதியில் 'டேபிள்டெனிஸ்' போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

'நொக்கவுட்' முறையில் நடாத்தப்படவிருக்கும் மேற்படிப் போட்டி, எதிர்வரும் 28-ம், 29-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக உள்விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, ஆண்-பெண் இருபாலாருக்கும் 'ஒற்றையர்-இரட்டையர்' என்ற முறையில் தனித்தனிப் போட்டியாகவும், இருபாலாரும் சேர்ந்து விளையாடும் போட்டியாகவும் நடைபெறும்.

இலங்கை டேபிள்டெனிஸ் சங்கத்தின் விதிமுறைப்படி நடைபெறவிருக்கும் இந்த 'நொக்கவுட்' போட்டியில், வயதுக் கட்டுப்பாடின்றி யாவரும் கலந்து கொள்ளலாம். இப்போட்டியில் கலந்து கொள்ளவிரும்புவோர், நாளை திங்கட்கிழமைக்கு முன், விண்ணப்பிக்க வேண்டுமென யாழ். பல்கலைக்கழக விளையாட்டுப்பகுதி தெரிவித்துள்ளது. (வி)

## நாளை ஆரம்பம்

2-வது பிரிவு

**O/L DAY CLASSES**

மார்ச் 25ல்

காலை 8-00 — 1-30 வரை

(முற்றிலும் பாடசாலை வசதி போன்ற)

**NIRU TUITION CENTRE,**
STATION ROAD, KONDAVIL.

(எ 3807)

## BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

யாழ்.

**89 A/L**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம் | — | திரு. ரட்ணம் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| இந்து நாகரீகம் | — | திருமதி இ. அருள்நங்கை |
| தமிழ் | — | திரு. நாகேஸ்வரன் |
| புவியியல் | — | திரு. பாலா, சன் |
| அரசியல் | — | திரு. மசதைல்ட் |

ஆரம்பம்: 28-3-87 (சனி 8 மணி)

**விஞ்ஞானம் 89 A/L**

| | | |
|---|---|---|
| MATHS | — | திரு. நல்லையா |
| PHY | — | திரு. யோகானந்தா |
| CHE | — | திரு. பாபு |
| BOT | — | திரு. சர்வானந்தா |
| ZOO | — | திரு. தம்பிராஜா |

ஆரம்பம்: 28-3-87 (சனி 9-30)

87 A/L பௌதிகம் — திரு. யோகானந்தா
அலையியல் (ஒலியியல்) சனி, ஞாயிறு 7-15 (28-3-87

எ-3805

● கோட்டை ஷெல் தாக்குதல்:

# இருவர் பலி; 17பேர் காயம், சிகிச்சைநிலையம், கல்லூரி. வீடுகள். வர்த்தகநிலையங்கள் சேதம்

(கா யோகநாதன்)

**யாழ் கோட்டை இராணுவமுகாமிருந்து நேற்று அதிகாலை முதல் யாழ் நகரை நோக்கி நடந்த ஷெல் தாக்குதலில் இருவர் பலியானார்கள்.5 வயது குழந்தை உட்பட 17 பேர் காயமடைந்தனர்.**

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, தனியார் சிகிச்சைநிலையம், சுகாதார அத்தியட்சகர் காரியாலயம், வர்த்தகநிலையங்கள், வீடுகள் பலத்த சேதமடைந்தன. வீதியெங்கும் மின்கம்பிகள், தந்திக்கம்பிகள் அறுந்து தொங்குகின்றன.

யாழ். பஸ்நிலையம் போர்க்களமாக காணப்படுகிறது. பஸ்கள் மற்றும் வாகனங்கள் எதுவும் காணப்படவில்லை.

புலிகள் போராளிகள், சந்திக்கு சந்தி நவீன ஆயுதங்களுடன் தயார்நிலையில் நகரை காவல்புரிந்துவருகின்றனர்.

நீதிமன்றம், பாடசாலைகள் நடைபெறவில்லை. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதியில் சில நோயாளிகள் மட்டும் வந்திருந்தனர். மினி சினிமா எதுவும் நடைபெறவில்லை. தனியார் கல்லூரிகள் நடைபெறவில்லை.

வ. பி. போ. ச. பஸ் தனியார் பஸ்சேவை நேற்று நடைபெறவில்லை.

வெடித்ததால் மதில் உடைந்து விழுந்துள்ளது.

எதிரிலுள்ள கடை மீதும் ஷெல்விழுந்துள்ளது. கடைக்கு சேதமேற்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதி, மின்சார நிலையவீதி சந்தியில் நான்கு கடைகள் ஷெல் தாக்குதலினுல் பலத்த சேதமடைந்துள்ளன. கடையின் பாதுகாப்பிற்காக முன்னுல் அடுக்கப்பட்டிருந்த மண்மூடைமீது ஷெல் விழுந்ததினுல் மூடைகள் வீதியில் சரிந்துவிழுந்துள்ளன. கடைகளின் இரும்புக்கதவுகளில் பலதுவாரங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வீதியிலும் மின்கம்பிகள் அறுந்த நிலையில் காணப்படுகின்றன.

## 60 தடவைக்கு மேல் ஷெல் தாக்குதல்

நேற்று அதிகாலை ஒன்றரை மணியளவில் துப்பாக்கிசூட்டு சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்டதைத் தொடர்ந்து இரண்டு மணிக்கு கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல் ஆரம்பமானது. யாழ், நகரெங்கும் பரவலாக இத் தாக்குதல் நீடித்தது.

மக்கள் ஷெல் தாக்குதல் நடைபெற்ற சமயமே உடுத்த உடைகளுடன் நகரை விட்டு வெளியேறி நல்லூர் பகுதி நோக்கி நள்ளிரவில் சென்றவண்ணமிருந்தனர்.

நேற்றிரவு கோட்டையில் இருந்து அறுபது தடவைக்கு மேல் ஷெல் ஏவப்பட்டது. யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் மட்டும் பதினெரு தடவை ஷெல் விழுந்து வெடித்தது. 'மேபள் தம்பையா' மண்டப மேல் மாடியில் ஷெல் விழுந்து முற்ருக சேதமடைந்துள்ளது. பல வகுப்பறைகளும் சேதமடைந்துள்ளன மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

அத்தியடியில் இருதடவை ஒரே வீட்டில் ஷெல் விழுந்து வீடு சேதமடைந்தது, ஆரியகுளம் சந்திக்கருகிலும் ஷெல் விழுந்து வெடித்தது.

1ம் குறுக்குத் தெருவில் உள்ள தனியார் சிகிச்சை நிலையம் ஷெல் தாக்குதலினுல் முற்ருக சேதமடைந்துள்ளது. அதிபர் எஸ். எம் மூர்த்தி, ரகுநாதன் ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்துள்ளன, டாக்டர் புவனேந்திரன் வீடும் சேதமடைந்துதுள்ளது. ஜனுப் சகிட், எஸ். வேலாயுதம் ஆகியோரின் வீடுகளும் சேதடைந்துள்ளன.

2ம் குறுக்குத் தெருவில், அப்பாத்துரை, சின்னத்தம்பி, பாலசுந்தரம், க. சுப்பிரமணியம், எஸ். பி. கே. சொலமன், ஜோசப் ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்துள்ளன.

பிரதான வீதியிலே மின்கம்பிகள், தந்திக் கம்பிகள் அறுந்து வீதியில் அங்குமிங்குமாகக் கிடக்கின்றன, பிரதான வீதியிலுள்ள கானுக்குள்ளும் ஷெல் விழுந்து வெடித்துள்ளது.

### ஆஸ்பத்திரி மதில் சேதம்

யாழ். ஆஸ்பத்திரி முன் மதில் சுவர்மீது ஷெல் விழுந்து

கொட்டடி பகுதியாலும் ஏற்கனவே மக்கள் வெளியேறியவீடுகள் மீது ஷெல்கள் விழுந்து வெடித்துள்ளன.

யாழ். ஆயர் இல்லத்திலுள்ள தண்ணீர் தொட்டி மீதும் ஷெல் விழுந்து சேதம் ஏற்பட்டுள்ளது. யாழ். புகையிரத நிலையத்திற்கு முன்னுலும் ஷெல் விழுந்து வெடித்துள்ளது

ராசாவின் தோட்ட வீதியில் இரு பன்றிகள் ஷெல் தாக்குதலினுல் பலியாகியுள்ளன.

1ம், 2ம், 3ம் குறுக்குத்தெருவிலுள்ள பலர் நேற்று அதிகாலையேவெளியேற தொடங்கியுள்ளனர். நேற்றுக்காலையும் சில குடும்பங்கள் வெளியேறின.

அதிகாலை ஷெல் தாக்குதலை தொடர்ந்து 3 மணியளவில் ஹெலிக்காப்டர்கள் நகரை வட்டமிட்டுப் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. சந்திக்கு சந்தி காவலில் நின்ற விடுதலைப்புலிகள் போராளிகள் ஹெலிக்காப்டர்களை நோக்கி தாக்குதல் நடத்திய போது, ஹெலிகள் மேலே எழுந்து கடலைநோக்கி சென்றன

மூன்றரை மணியளவில் மிக தாழ்வாக ஹெலியொன்று நகரை நோக்கி வந்தபோது விடுதலைபபுலிகள் போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினுர்கள்.

ஷெல் தாக்குதல் தொடர்ந்து நான்கு மணிவரை நடந்துள்ளது சிறிது ஓய்ந்திருந்தது. பின்னர் 6 மணிவரை தொடர்ந்தது. சில வேளைகளில், நிமிடத்திற்கு ஒரு தடவை ஷெல் தாக்குதல் தொடர்ச்சியாக இடம்பெற்றது. 6 மணிக்கு பொம்பர் ஒன்று நகர்மீது வட்டமிட்டு இருதடவை குண்டு வீசின.

மக்கள் அச்சத்தினுல் அதிகாலை 2 மணிமுதல் 'கொங்கிறீட் பிளாட்களுக்குள்ளும், பாதுகாப்பான இடங்களிலும் பதுங்கு குழிகளுக்குள்ளும் இருந்தனர்.

பிரதான வீதியிலுள்ள கடை ஒன்றுமீதுஷெல் விழுந்து வெடித்ததால் பலத்த சேதமேற்பட்டது. யன்னல் கதவுகள் உடைந்துள்ளன.

கச்சேரி பகுதியிலுள்ள அனுதை இல்லத்திற்கருகில் ஷெல் விழுந்ததால் 4 சிறுவர்களும் ஒரு தாயும் காயமடைந்தனர்.

### காயமடைந்தோர் விபரம்

ஷெல் தாக்குதலில் இருவர் பலியானுர்கள். அவரின் சடலம் நேற்று நண்பகல் வரை அடையாளம் காணப்படவில்லை. காயம் அடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். சிலர் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கும் சென்றனர். குமரேசன் என்பவர் பலத்த காயமடைந்து தனியார் சிகிச்சை நிலையதில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர் விபரம்:- தங்கம்மா (70), ஆர். ஹசிம் (24), பேபி (21), சசிதரன் (5), எஸ். இன்பம் (20), எஸ். கனகசபை, எஸ். வேணி (20),எம். சுந்தர் (26), பூவன் (23).

காயமடைந்த சிலர் சிகிச்சை பெற்று உடன் சென்றனர். நகர்வீதி சனநடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது.

## பதவி உயர்வு

(மீசாலை நிருபர்)

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபராகப்பதவி ஏற்றுக்கொண்ட திரு. க. சண்முகலிங்கம் பணி ஏற்று இரு மாதங்களில் மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பதவி உயர்வு பெற்று முல்லைத்தீவுப் பகுதி மேலதிக அரசாங்க அதிபராக ஏப்ரல் 6ந் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ளார். சாவகச்சேரி உதவி அதிபராக பொத்துவில் உ. அ. அதிபர் திரு. பி. சுந்தரம்பிள்ளை இடமாற்றம் பெற்றுள்ளார்.

## வானியல் பாசறை

யாழ்ப்பணம், திங்கள்

விஞ்ஞானத் துறையில் ஆண்டு 8ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான வானியல் என்னும் பாடத்தை செயல் மூலம் கற்பிப்பதற்கு உதவு முகமாக வேலணை புங்குடுதீவு ஆகிய இரு வட்டாரத்திலுள்ள பாடசாலை மாணவர்கட்கு தொண்டமனுறு வெளிக்கள நிலையம் அண்மையில் இரு பாசறைகளை வேலணை புங்குடுதீவுப் பகுதியில் நடத்தியது.

வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாசறையில் 55 மாணவர்களும், 15 ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இப் பாசறையை கொத்தணி உப அதிபர் ஆர். வரதலிங்கம் ஆரம்பித்து வைத்நார்

புங்குடுதீவு ம. வி. யில் நடைபெற்ற பாசறையில் 23 மாணவர்களும், 17 ஆசிரியர்களும் பங்குபற்றினுர்கள். இப் பாசறையை யாழ் கல்வித் திணைக்கள கல்வியதிகாரி கி. புலேந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

தொண்டமானுறு வெளிக்கள நிலையத்தைச் சேர்ந்த திரு. கோ. செல்வவினுயகம் நெறியாளராகவும், திருவாளர்கள். சி. அம்பிகாவரன், நா. சுவாமிநாதன், ச. ஸ்ரீரங்கநாதன், ஆர். ஜெயசீலன் ஆகியோர் மூலவள ஆளணியினராகவும் செயலாற்றினர்.

விவசாயிகள்

## நிவாரணம் கோரி ஜனுதிபதிக்கு மகஜர்

வவனியா நிருபர்

வறட்சியால் பாதிப்புற்ற வன்னி மாவட்ட ஏழை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும்படி வவனியா மாவட்ட விவசாயிகள் சங்கம் ஜனுதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது,

வவனியா, முல்லைத்தீவு, மன்ஞர் மாவட்டங்களில் விவசாயிகள் வறட்சியினுல் மிகவும் பாதிக்கப்பட்டு பட்டினியை எதிர்நோக்குகின்றுர்கள் வரட்சியின் காரணமாக 80சதவீதத்திற்கு மேலான நெற்பயிர்கள் இம்முறை நாசமாகியுள்ளன. இதனுல் ஏழை விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

எனவே கடும் வறட்சியினுல் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி ஜனுதிபதிக்கு மேற்படி சங்கத் தலைவர் எம். நடராஜா மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இன்றைய போராட்டத்தில்

## பிரஜைகள் குழுக்களின் ஆக்கபூர்வப் பணி அவசியம்

பருத்தித்துறை, திங்

"தமிழீழ விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இத்தமிழீழ விடுதலைப் பேபராட்டத்திற்குத் தமிழ் மக்கள் அனைவரும் எதுவித வேறுபாடுகளின்றி ஒன்றிணைந்து உதவிகளை வழங்க வேண்டும். இந்நிலையிலே பிரஜைகள் குழுக்களின் செயற்பாடுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன. பிரஜைகள் குழுக்கள் தமிழ் மக்களின் இலட்சியம் வெற்றிபெற முன்னின்று ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் வீ.எஸ்.தேவதாசன் பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் விசேட பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வட இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இ பிரஜைகள்குழுக்கூட்டத்தில்தமிழ் மக்களின் இன்றைய நிலையும் செயற்பாடுகளும் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் கலந்து கொண்டனர். பிரஜைகள் குழுக்கள் இன்றைய நிலையிலே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பல பிரஜைகள்குள் உறுப்பினர்கள் வலியுறுத்திக் கூறினர்.

தொடர்ந்து உரையாற்றிய தேவதாசன் தமிழ்மக்கள் இன்றைய காலகட்டத்தைப் பற்றி சிந்திக்காமல் செயற்பட்டால் நிச்சயம் பாதாளத்தில் விழ நேரிடும் தமிழ் மக்களை ஒன்றிணைத்து இன்றையகாலகட்டத்திற்கேற்பச் செயற்பட வைக்க வேண்டிய பொறுப்புப் பிரஜைகள்குழுக்களைச் சேர்ந்ததென்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடாது தமிழ்மக்கள் ஒதுங்கியிருந்தால் எமது எதிர்காலச் சந்ததியினர் நிச்சயம் அடக்கி ஒடுக்கப்பட்ட அநாதைகளாகவே வாழ்வர் என்றார்.

பருத்தித்துறை பிரஜைகள் குழுச் செயலாளர் சு. கதிரேசு உரையாற்றுகையில் 'தமிழ் மக்கள் இன்று அனுபவித்து வரும் இன்னல்களை நீக்க தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இன்று தமிழ்ப் பகுதிகளில் இயங்கி வரும் பிரஜைகள் குழுக்களின் செயற்பாடுகள் மிகமுக்கியத்துவம் வாய்ந்தனவாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் மக்களை இணைத்து விடுதலைக்கானவழிகளை வகுத்துக் கொள்வதில் பிரஜைகள் குழுக்கள் முன்னின்று பங்காற்ற வேண்டும். இளைஞர்கள் போராடி தமிழீழத்தை வென்றெடுத்துத் தருவார்கள் என நினைத்துக் கொண்டிராமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டும்" என்றார்'

## தடுப்பூசி ஏற்றுமாறு ஆலோசனை

(வவனியா நிருபர்)

வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கு உடனடியாக தடுப்பூசி ஏற்றிக் கொள்ளும்படி வவனியா மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் சிறிராஜேஸ்வரன் வவனியா வாழ் வாசிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## கனேடிய அரச உதவி

வவனியா நிருபர்

முல்லைத்தீவு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ கனேடிய அரசாங்கம் முன்வந்துள்ளது என முல்லைத்தீவு சமூகசேவைப்பகுதி அதிகாரியான எஸ். பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக 50 குடும்பங்களுக்கு கால் நடை வளர்ப்பிற்கு நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

அண்மைக்கால அசம்பாவிதத்தினுல் முல்லைத்தீவு மாவட்டம் வெகுவாகப்பாதிக்கப்பட்டது தெரிந்ததே. தற்போது பாதிப்பிற்குள்ளான அகதிகளுக்கு றெட்பானு, நோருட் ஸ்தாபனங்கள் உதவி வழங்கி வருகின்றன.

### மணிவாக்கு

நிறையுடைய நெஞ்சின் இமையாய் போற்றி!
நீங்காது என்னுள்ளத்திருந்தாய் போற்றி.
—அப்பர் சுவாமிகள்.

## நமது நோக்கு

# இன்றைய இக்கட்டுக்குரிய இலக்கிய நயம்

நல்லறிஞரது உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பொங்கும் ஆர்வத்திற் பிறப்பது இயற்கவிதையாகும். இத்தகைய கவி பாடும் நல்லியற் கவிஞர் மிகச்சிலரே. அவர்கள் பிறப்பிலேயே கவிஞரென்பது ஒரு ஆங்கிலவாசகம்.

எங்கள் நேற்றைய பத்திரிகை கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் 'பாதை மாறியபோது' என்னுங் காவியத்திற்குக் கிடைத்த பாராட்டை மிக அழகாக பிரபலப்படுத்தியிருக்கிறது.

'பொன்னின் குடத்துக்கு பொட்டிட வேண்டுமா?' என்பார்கள். பொன்னோ அல்லது கலப்போ என்பது எக்காலத்திலும், குறிப்பாக இக்காலத்தில் ஆராயப்பட வேண்டியது.

அத்தகைய ஆய்வை பேராசிரியர் அ. சண்முகதாஸ் போன்ற அறிஞர் நடத்துவதாலுல் பொட்டுச் சரியாகத்தான் இடப்படும். அந்த நம்பிக்கை நிறைவேறியுள்ளது.

இன்றைய நெருக்கடியில் இலக்கியப் படைப்புக்கள் பல வெளியாகின்றன. அது இயற்கை. இருப்பினும் தரமான கவிதைகளைக் காண்பது அரிது. மனிதர் அறிந்து உய்தற்குரிய விழுமிய உண்மைகளை தினசரி வாழ்வில் நாடகப்போர்வையில், நகைச்சுவை மிளிரச் செய்வது தனித்துவக்கவிஞராலேயே முடியும்.

புறநானூற்றுப் பாடல்களில் சொல்லையும் பொருளையும் பிற்காலப் பெருங் கவிஞர் பொன்னேபோலப் போற்றியதாகக் கூறப்படுகிறது. காரணம்சொல்லும் பொருளும் இனிமையும் எளிமையும் கலந்தவையாக விருப்பதே.

நாட்டில் வாழும் உயிர்களுக்கு அரசனே உயிர் என்ற உண்மை.

“நெல்லும் உயிரன்றே;
நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகம்”

என்று புறநானூறில் கூறப்படுகின்றது.

இதுபோன்ற பாடல்கள் தமிழ்ச்சுவைதேடும் ரசிகர்களுக்கு ஓர் இலக்கியக் கேணியாகும்.

பாரதியாரின் பாட்டின்பம் இத்தகையது. மிக எளிமையாக இனிமையாகப் பாடிய பாரதியாரின் பாடல்கள் உண்மையான இலக்கியம் அல்லவென்றும் கொண்ட காலம் ஒன்று தமிழ் நாட்டிலும் இங்கும் இருந்தது.

பாரதியாரின் பாட்டின்பத்தை சுவைத்துக்காட்டி யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலேயும் அவற்றை பாடச்செய்தவர் இந்நாட்டுத் தமிழ்த் துறவி சுவாமி விபுலானந்தர் என்பது இன்று சிலருக்குத் தெரியாதிருக்கலாம்.

புறநானூற்றின் நடை பாரதியாரின் எளிமை ஆகிய இரு சாயல்களும் இக்காலத்துக்கேற்ற முறையில் கவிஞர் சுந்தரம்பிள்ளையின் கவிதைகளில் காணப்படுகின்றன.

இன்று வெளியான காவியம் இன்று நடைபெறும் உரிமைப் போரின் மறுபக்கம்

கவிஞர் சுந்தரம்பிள்ளையின் படைப்பை அற்புதமென்று பாராட்டியவர்கள், அவரின் கவிதாசாமர்த்தியத்தில் மயங்கியவர்களே!

'ஆட்களைக் கொலை செய்திடும் அல்சேஷன்' ஆட்சி என்ன அழகாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

அரக்கரும் அமரரும் அக்கம் பக்கமாக பந்தய பீடத்தில் பங்குபற்றுகின்றனர். வெறும் ஓட்டமல்ல ஆயுத பாணிகளின் கொடும் போராட்டம்.

கவிஞர் தன் கதாநாயகனாகிய 'கற்பியின்மைந்தன்' தருமனை போர்க்களத்தில் சேர்த்து விடுகிறார், ஆனால் அதன் பின்னணியே கவிதைக்கு கம்பீரமளிக்கிறது.

எங்கள் தந்தையர் நாட்டில் தந்தை பழனி வீரம் பிறக்கும் வகையில் மகனுக்குரிய கல்வி அளிக்கிறார். 'நல்லமாதிரி இங்கிலிஸ் பேசும் பென்னம் பெரியபடிச்ச மனுசனைப் பெருமை பெற்றிடப் பாடுபடுகிறார், ஏ. எல். படிக்க வைக்கிறார்.

அரசின் தரப்படுத்தல் முதலாம் தோல்வி. உயர் கல்வி மூடிய கதவு: எனவே தொழில் முகவரிடம் தஞ்சம், முதலாளித்துவ நாகரிகத்தால் இதுவும் ஏமாற்றம் என்ன செய்வது? முத்தையன் கட்டில் கமம்: அங்கும் திறந்த பொருளாதாரம் யாழ்ப் கமக்காரருக்கு மண்போடுகிறது.

உயிர்த்துடிப்புடைய இளைஞர் ஆகையால் காவல் படையினரின் தேடல் அச்சுறுத்துகிறது. இவற்றுக்கு முடிவு அறப்போர்.

இப் போரில் துன்புறும் தமிழ்மக்கள் அனைவரும் நெருக்கடி மிகுந்த இக்காலத்தில் பாதைசரியோ அல்லவோ என்று கலங்குவது இயற்கை.

பாதைமாறியது தவிர்க்க முடியாது; அது சரியான பாதை லட்சியப்பாதை தான் என்பதை கவிஞர் அமைத்த கம்பீரமாளிகை காட்டுகிறது.

அரசன் தானும் அறியானாய், அறிந்துசொல்லும் அறிஞர் உரையையும் ஏற்றுக்கொள்ளானாய்அநீதியை ரசிக்கும் கொடுமையால் விளைந்ததே இப்போ.

'மினிபஸ்' இக்கவியின் உச்சத்தை எட்டுகிறது: விடயம் அனைத்தும் அங்கு பொதிந்திருப்பது இயற்கைப் புலவனின் இலக்கணமெனலாம்.

## இலங்கையில் மனித உரிமைகள் மீறல் – 5

# ‘84-ம் ஆண்டின் இறுதி 3' மாதத்தில்

# வடக்கு, வடமேற்கில் 350 பேர் கொலை!

84-ம்ஆண்டு செப்ரெம்பர் டிசம்பருக்கு இடைப்பட்ட 3மாதகாலத்தில் இலங்கையின் வட, மேற்குப் பகுதிகளில் 350க்கு மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டனர். இவர்களில் 274 பேர் தமிழர். ஏனையோர் சிங்களக் குடியேற்றவாசிகள் ஆவர்.

செப்ரெம்பர் 1ம் திகதி திக்கத்தில்இடம்பெற்றகண்ணிவெடிச்சம்பவமொன்றில் ஆறு பொலிஸ் கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து ராணுவத்தினரும் கமாண்டோக்களும் இணைந்து நடத்தியதாக்குதலில் 18 பொதுமக்கள்சுட்டுக்கொல்லப்பட்டனர். யார்காயமடைந்தனர். பருத்தித்துறையைச் சேர்ந்த நா. விஜயரத்தினம் என்பவரின் பெருமளவு நூல்கள் அவரதுவீட்டின் முன் எரிக்கப்பட்டன. நாட்டின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக ஹாட்லிக்கல்லூரியின் 3 பிரதான கட்டிடங்களும் 7500 இற்கு மேற்பட்ட நூல்களும் எரிக்கப்பட்டன. திக்கம், சக்கோட்டை, இன்பருட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் பெருந்தொகையான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தில்தப்பிய ஒருவரின் வாக்குமூலம்.

“...சம்பவதினத்தன்றுமதிய போசனத்தின் பின்னர் வீட்டு விறுந்தையில் உட்கார்ந்திருந்தேன். ஒரு ராணுவ ஜீப் ஒன்றும், ட்ரக்கும் வீட்டைத் தாண்டிச் சென்றன. அப்போது ட்ரக்கினுள் இருந்த படையினர் எனது வீட்டின் திசையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இருந்தநிலையில் நான் நீட்டி வைத்திருந்த இரு பாதங்களும் சன்னங்களால் நொருங்கின. உடனடியாக நான் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். அங்கே எனது இரு பாதங்களும் துண்டிக்கப்பட்டன.”

ஆரம்பத்தில் இந்த ராணுவ நடவடிக்கைகளை மறுத்த அரசாங்கம் பின்னர் பொலிஸ்மா அதிபர் இதுபற்றிய விசாரணைகளைமேற்கொள்ளலாம் என அறிவித்தது. ஆயினும் இதுவரை அப்படியொரு விசாரணை நடைபெற்றிருந்தால் அதன் பெறுபேறுகள் பற்றியோ அல்லது இதற்குப்பொறுப்பாளர்கள் மீது ஏதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுபற்றியோ ஆதாரங்கள் இல்லை.

### பஸ் படுகொலை

பெப்ரவரி மாதம் 11ம் திகதியின் அதிகாலை நேரத்திலே, கொழும்பு-யாழ். சேவையிலீடுபட்டிருந்த தனியார் பிரயாணிகள் பஸ் ஒன்று அநுராதபுரத்துக்கும் வவனியாவுக்குமிடையில் காகி உடைதரித்து உப-இயந்திரத்துப்பாக்கிகளுடன் காணப்பட்ட ஐந்து அல்லது ஆறுபேரால் தடுத்துநிறுத்தப்பட்டது அவர்கள்பின்னர் துப்பாக்கிமுனையில் பஸ்ஸை செலுத்தப்பணித்து வவனியா-மன்னார் வீதியிலுள்ள 6-வது மைல்கல்லில் நிறுத்தப்பணித்தனர் பின்னர் பஸ்ஸிலிருந்த சிங்களப் பயணிகள் வெளியேபோகப் பணிக்கப்பட்டனர். பின்னர் ஏழுபேரது பொருட்கள் களவாடப்பட்டு, சகல ஆண் பயணிகளும் கீழிறக்கப்பட்டு சுடப்பட்டனர். 15பேர் ஸ்தலத்திலும் பின்னர் ஆஸ்பத்திரியில் ஒருவரும் இறந்தனர். இரு இளம்பெண்கள் அருகிலுள்ள காட்டுக்குள் அழைத்துச்செல்லப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளவர்கள் ராணுவத்தினர். என்பதை அரசாங்கம் நிராகரித்தது. கெரில்லாக்கள் அல்லது தீவிரவாத அரசியல் குழுக்கள் அல்லது ராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்டோர் இதிலீடுபட்டிருக்கலாம் என பாதுகாப்பமைச்சு கூறியது. ஆயினும் பாதுகாப்புப்படையினர் அல்லது படைகளுடன் தொடர்புடைய நபர்களே வவனியா கொலைகளில் ஈடுபட்டிருந்தனர் என நம்ப இடமுண்டு* என “அம்னெஸ்ரி இன்டர்நஷனல்” தெரிவித்துள்ளது.

செப். 13இல் இதுபற்றிய விசாரணையை நடத்துமாறு சி. ஐ. டி. பணிக்கப்பட்டது இதுவரை இவ்விசாரணைகள் பற்றிய நகல்கள் எதுவுமில்லை.

### கென், டொலர் பண்ணைகள்

இவ்விரு பண்ணைகளும் இனவன்செயல்களையடுத்து பெருந்தோட்டப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த தமிழரின் புனர்வாழ்வுக்கான காந்தியத்தினுல் நடத்தப்பட்ட விவசாயப்பண்ணைகளாகும் முறையே 17, 243, ஏக்கர் விஸ்தீரணங்களைக் கொண்ட இவை 77ம் ஆண்டு முதல் இயங்கிவருகின்றன. 84 ஆகஸ்டில் முன்னாள் கைதிகளைக் குடியமர்த்தும் நோக்குடன் இவை அவசரகால அதிகாரங்களின் கீழ் அரசினுல்எடுக்கப்பட்டன. பின்னர் அங்கிருந்த தமிழர் விரட்டப்பட்டு அரசினுல்வழங்கப்பட்ட ஆயுதங்களுடன் முன்னாள் சிங்களக் கைதிகள் குடியேற்றப்பட்டனர்.

நவ.30 இல் தமிழ்தீவிரவாத குழுவொன்றின் உறுப்பினர் எனக் கூறப்படும் சிலரால் இவை தாக்கப்பட்டு 65 பேர் கொல்லப்பட்டனர்.

### கொக்கிளாய், நாயாறு

இவை இரு தமிழர் மீனவர் கிராமங்களாகும். தென்னிலங்கையிலிருந்து கடற்றொழிலாளர் இங்கு மீன்பிடிக்காலத்தில் போய் தங்கிப்போவது வழக்கம். இவர்களை இப்பிரதேசத்திலேயே, அவர்களின் குடும்பத்துடன் நிரந்தரமாக குடியேற்றப்போவதாக அரசாங்கம் அறிவித்தது. இதற்காக 1,000 வீடுகளைக் கட்டும்நோக்குடன் அரச அதிகாரிகள் ஒக். 19 இல் இப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்தனர். நவ. 30ம் திகதி ஒரு தமிழ்த் தீவிரவாதக் குழுவின் சில உறுப்பினர்களால் இங்குள்ள சிங்கள மீனவர் தாக்கப்பட்டனர். இதில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

### ஒதியமலையில்

வட முல்லைத் தீவிலுள்ள ஒதியமலைக்கு டிச. 1 திகதி பதவியா ராணுவ முகாமைச் சேர்ந்த 30 — 40 படையினர் சென்றனர். அன்றிரவு அவர்கள் அங்குள்ள இந்துக் கோவிலொன்றில் தங்கினர். அடுத்த நாள்காலை அங்கிருந்து வீடுகளுக்குச் சென்ற அவர்கள் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்களைக் கைதுசெய்தனர். இவர்கள், பெரும்பாலானோர் கைகள் பின்னுல் கட்டப்பட்ட நிலையில், கிராமத்தில் சனசமூக நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டு 27 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வேறு ஐவர், நால்வர் 50வயதிற்குமேற்பட்டவர்கள்,ட்ராக்டரின் ட்ரெய்லர்ஒன்றில்ஏற்றி கென்ட் பண்ணையருகே கொண்டுசெல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். இருவரின் சடலங்கள் பின்னர் இங்கு கண்டெடுக்கப்பட்டன.

டிச 4ம் திகதி பிரேத பரிசோதனைகளும் மரண விசாரணைகளு இடம்பெற்றன. இன்றுவரை இதன் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.

### வவனியா

வவனியாவில் டிசம்பர் ஆரம்பப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட 100க்கு மேற்பட்டவர்கள் நிலைபற்றி 'அம்னெஸ்ரி இன்டர்நேஷனல்' அண்மையில் தனதுஅறிக்கையில் வெளியிட்டிருந்தது.

ஈரற்பெரியகுளத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதி ஒருவரின் (பின்னர் விடுதலை செய்யப்பட்டார்) வாக்குமூலம் அ.இ' க்குக் கிடைத்துள்ளது. (15-09-80) 'ஈழநாடு'வில் 'இலங்கையில் அதிகரித்துவரும் தமிழர் மறைவுகள்' என்ற தலைப்பில் இவரது வாக்குமூலம் பிரசுரமாகியது )

இவரது கூற்றுப்படி டிச. 2ம் திகதி இம்முகாமில் 100க்கு மேற்பட்ட வெடிச்சத்தங்கள் கேட்டனவாம். சேமமடு, செட்டிகுளம் கிராமங்களிலும் வீடுகளிலுள்ள ஆண்கள் விமானப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். அதன் பின்பு இவர்கள் 'காணமற்போயுள்ளனர்'. (விபரம் ஈழநாடு 11-09-86 இதழில் இலங்கையில் அதிகரித்துவரும் தமிழர் மறைவு' என்ற தலைப்பில் வெளியானது.)

### மன்னார்

டிச 4ம் திகதி முருங்கனில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவமொன்றில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். இதற்குப் பதிலடியாக இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் மிகப் பயங்கரமாயிருந்தது.

இங்கு மரண எண்ணிக்கை 106 எனக் கணிக்கப்பட்டது. மன்னாரின் முன்னாள் எம். பி. இவற்றில் 7 சடலங்களைஎடுக்க உதவியுள்ளார்.

இச்சம்பவம் 'அ. க.' வெளியிட்ட அறிக்கையில்'

முருங்கன் தபாலகத்தில் பிரவேசித்த ராணுவத்தினர் தம்மை முஸ்லிம் என அடையாளப்படுத்திய ஒருவரைத் தவிர ஏனைய 10 பேரை சுட்டனர். 4 பேர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். படுகாயங்களுடன் தப்பியவர்களில் ஒருவர் தபாலதிபர்.

முருங்கனிலிருந்து வவனியாவுக்குச் சென்ற இ. போ. ச. பஸ் ஒன்றை படையினர் தடுத்து நிறுத்தியதாகக் கூறப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்களக் கண்டக்டரின் வேண்டுதலையும் புறக்கணித்த படையினர் அவரையும் முஸ்லிம் சாரதியையும் உட்பட 16 ஆண் பயணிகளைச் சுட்டுக் கொன்றனர்.

உதயவன்களத்தில் விவசாயிகள் எனக் கருதப்படும் 16 சிவிலியன்கள் படையினரால் கொல்லப்பட்டனர். இவர்களில் இருவர் சிங்களபபெண்களாவர்.

பரப்பங்கண்டலில் ஜீப்களில் பயணம் செய்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் தமது குழந்தையைக் கவனித்துக் கொண்டிருந்த இளம் அன்னை ஒருவரும் அடங்குவர். 3 விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் குழந்தை தப்பியது.

இக்கொலைகள்பற்றியபூரண விசாரணை மன்னார் பிரஜைகள் குழு ஜனதிபதியிடம் சமர்ப்பித்திருந்தும் விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை.

### பாதிரியார் கொலை

டிசம்பர் 13ம் திகதி மெதடிஸ்த பாதிரியாரான வண ஜோர்ஜ் ஜெயராசசிங்கம்,

(5-ம் பக்கம் பார்க்க)

## 41–ம் நாள் அந்தியேட்டி வைபவ அழைப்பிதழும் நன்றி நவிலலும்



**வைத்திலிங்கம் வசீகரன்**

[வீரவேங்கை லெப்டினன்ட் சித்தார்த்தன்]
அன்னையின் மடியில்: 09-02-1957
தாயகத்தின் மண்ணில்: 14-02-1987

வன்னியை வாழிடமாய்க் கொண்ட வல் வைத்தாயின் தனையன்! மன்னர் உயிலங்குளத்தின் பின்னுல் மறவர் படையின் தலைவன்! நண்ணிய சிங்களப் படையை நடுங்கடித்த நற்போர் வினையன் எண்ணிய விதத்தில் போர்முடித்த இவன் இன்னோர் விசயன் அனையன்]
நாவற்குழி உள்ளார் கசிவே இல்லார் கதைகளை முடிக்க
வையகமெல்லாம் புகழும் விதத்தே வரலாறு படைக்க
தையல் நல்லான் தமிழென்பாள் தனைகளை விரைந்து டைக்க
ஐயன் இவன் முயல்கையிலே வையகத்து வாழ்வை முடித்தான்.
அன்னாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியும் மற்றும் பல விதத்திலும் உதவிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேலும் 26-03-87 வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகள் யாவற்றிலும் கலந்து கொள்ளுமாறு உறவினரையும், நண்பர்களையும் சக தோழர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தந்தை, சகோதரர்கள், உறவினர்கள்.
183. குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
[சி-8172]


## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்

நாளை ஆரம்பமாக விருந்த வண்ணை சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாட்டு நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆலய தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

## இலங்கையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது வாகனச் சாரதி அப்துல்காதர் சுலைமான், ஜேசுதாஸன் ரேச் (பொலிஸ் கான்ஸ்டபிள்) ஆகியோர் மன்னாரிலிருந்து முருங்கனுக்கு போய்க்கொண்டிருக்கையில் ராணுவத்தால் தடுத்துநிறுத்தப்பட்டு, சுடப்பட்டு பின்னர் வாகனத்தால் எரிக்கப்பட்டனர்.

### லண்டன் ரைம்ஸ்

இப் பத்திரிகையில் செய்தியாளர் ரி. பிஷ்லொக் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பிய செய்தியறிக்கை. "......சுடுவதில் மகிழ்ச்சிகொள்ளும் படையினர் கொலை கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் சித்திரவதை ஆகியவற்றுல் வடபகுதி மக்கள் அச்சத்தில் ஆழ்த்தி வருகின்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள்கைது செய்யப்பட்டு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எங்குள்ளனரென பெற்றோருக்கு தெரியாது. அவர்கள் இலங்கையில் 'காணமல் போய்விட்டவர்' களாகியுள்ளனர். ராணுவப் பாதுகாப்பிலுள்ள இளைஞர் மீது சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதற்கான சான்றுகள் உண்டு.."

தொகுப்பு : 'ஸேனு'.

(தொடரும்)


## கடைசிநேர வரிவிளம்பரம்

### சோதிடம்

விற்பனையாகிறது. மீண்டும் வியாழன் மாறுகின்றார். எல்லா ராசிகளுக்கும் ஒரே புத்தகம். ரூபா இரண்டு பட்டும். சோதிடர் ஆ. சிவராசா, வேலணை. சி-8176

LIDO
From Today
Daily at 10-30 a. m.
2-30 & 4-30, 6-30 p.m.
MAX DUGAN
RETURNS
(colour & action)

புதிய வெளியீடு
**வெலிங்டன்** திரையில்
Super Star Bruce Lee in
THE MAGNIFICENT
KICK
(Karate Film)
புருஸ்லீ நொடிநேரத்தில் 3 முறை உதைக்கும் பயங்கர கராட்டிகள் நிறைந்தது.




யாழ். நகரில் நேற்று அதிகாலை நடந்த ஷெல் தாக்குதலினுல் காயமடைந்தவர்களில் இருவரை படத்தில் காணலாம்.

## விமான எதிர்ப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகொப்டர், பொம்பர் மீது விமானஎதிர்ப்பு ஆயுதங்களை [Antiraf weapons] பாவித்து தாக்குதல் நடத்தியதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலையடுத்து ஹெ யும் பொம்பரும் திரும்பி சென்றன. [ஊ]

## இன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட இந்தியத்தூதுவர் திரு ஜே. என். டிக்ஷிற் இன்று வருவாரென தெரிவிக்கப்பட்டது.

திரு. ராஜீவ் காந்தியின் அழைப்பின்பேரில் திரு. டிக்ஷிற் நேற்று முன்தினம் புதுடில்லி சென்ருர். [சி]

## இலங்கை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

அத்துடன் யாழ்குடா நாட்டில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பொலிஸ் விடு மினிமுகாம் மீது நடத்தியதாக்குதலும் ராணுவத்தினர் இனிமேல் தமது முகாம்களில் முடங்கியிருக்கமாட்டார்களென அமைச்சர் அத்துலத் முதலி எச்சரிக்கை டுத்திருப்பது பற்றியும் ஆராயப்பட்டதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [ஊ]

## ராணுவத்திடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு, ஆர். பி. ஜி. கஷல் ஐந்து, ரி. 56 ரக துப்பாக்கிகள் ஒன்பது, பத்து மேகதிக ரவைக் கூடுகள், எஸ். எல் ஆர்: நான்கு, குண்டு துளைக்காத கவச அங்கிகள், ஹெல்மட் ஒன்பது, ஆயிரக் கணக்கான ரவைகள், கண்ணி வெடி போன்றவையே விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டவையாகும். [ஓ]

## ஐவர்நிலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைத்தொடர்பு நிலையத்தைத் தகர்த்திருப்போம் அவ்வாறு செய்திருந்தால் எது வேலையும் சுலபமாக முடிந்திருக்கும். மக்களின் நலன் கருதியே நாம்தொலைத் தொடர்புநிலையத்தை தகர்க்கவில்லை. அவர்களால் எமக்கு இழப்பேற்பட்டபோதும் அவர்களைத் தாக்குவதைத் தவிர்த்துக்கொண்டோம். (ஓ)

## ராணுவ விஸ்தரிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

'தமிழீழப் பிராந்தியங்களில் தன் உச்சக்கட்ட இறுதிக் கட்டப்போரை சிறிலங்கா அரசு பிரகடனம் செய்து ஓர் சிவில்யுத்தத்தை தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தி வருகிறது.

சிறிலங்கா அரசு முப்படைகளின் முழுமுயற்சியுடன் தமிழ் பிரதேசங்களை இராணுவ மயமாக்கவும் தமிழ் பகுதிகளில் பொருளாதாரத் தடைகளை அமுல் செய்துபட்டினிச்சாவை ஏற்படுத்தவும் கடுமையாக முயன்றுவருகிறது. இவையனைத்தும் தமிழீழ மக்களின் அபார பங்களிப்பு விடுதலைப் புலிகளின் தீர தியாகத்தின் மத்தியில் முறியடிக்கப்பட்டு தமிழீழவிடுதலைப் போர் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிருது.

தமிழீழத்தின்மீது இவெறி அரசு நடத்தும் இன ஒழிப்புப் போராட்டத்தி முற்றுப் புள்ளிக்காக இப்புதிய அத்தியாயம் தொடங்கப்படுகிறது. வெற்றிகரமாகவும் சாதனையாகவும் மேற்கொள்ளப்பட்ட இம்முதற்படி தமிழினத்தின் விடிவுவரை தொடரப்படும்'' (ஊ)

## இன்று 5–வது ஒருநாள் போட்டி

(நாக்பூர்)

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5-வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறுகிறது.

ஆறு ஒருநாள்போட்டிகளைக் கொண்ட இத் தொடரில் நடைபெற்ற நான்கு போட்டிகளில் பாகிஸ்தான் 3-1 என்ற ரீதியில் முன்னணி வகிக்கிறது. (சி)

## புதிய 10 ரூபாய் நாணயம்!

கொழும்பு, திங்கள்

இலங்கையில் புதிதாக 10 ரூபா நாணயக் குற்றிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. சர்வதேசவீடமைப்புஆண்டை முன்னிட்டே இவை அறிமுகம் செய்யப்படவுள்ளன எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் இவை பவனைக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஊ)

## ஆண்டு 6 11க்கான பொதுப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்

இன்றுஆரம்பிக்கப்படவிருந்த பாடசாலைகளுக்கான முதலாம் தவணை பொதுப்பரீட்சை தவிற்க முடியாத காரணத்தால் 26ம் திகதி வியாழக்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு6-11க்கான விஞ்ஞான பாடங்கள் வியாழக்கிழமை நடைபெறும். 24ம், 2 ம்திகதிகளுக்குரிய பாடங்கள் முறையே அடுத்த மாதம் 2ம், 3ம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 12, 1 க்கான கலை வர்த்தகப் பரீட்சைகள் நேரசூசிப்படி நடைபெறும். [கே]

## படையினரின் சூட்டுக்கு மாணவன் காயம்

பலாலி, ஞாயிறு

படையினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மாணவரொருவர் பலத்தகாயத்துக்குள்ளானர்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த மகாலிங்கம்-சிறிதரன் [13 வயது] என்றயூனியன் கல்லூரி மாணவனே படையினரின்சூட்டுக்கு இலக்கானவராவார். இவருக்கு இடதுகையில் பலத்த காயமேற்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் கையெழுத்திட்டனர்

யாழ்ப்பாணம் செவ்

யாழ் நகரில் நேற்று நிலவிய பதற்றம் காரணமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர்,சார்ஜன்ட், லிகிதர்கள் தொழிலாளர்கள் உட்பட சுமார் எழுபத்தைந்து ஊழியர்கள் யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் கையெழுத்திட்டார்கள். (ஓ)

## விண்வெளிக்கோள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லுத்தப்படவுள்ளது.

40 தொன் எடையுள்ள உதியா செயற்கைகோள் செலுத்தும் வாகனம் மூலம் 145 கிலோ எடையுள்ள இந்த விண்வெளிக்கோள் இன்று நண்பகல் 12 மணி 5 நிமிடத்தில் தரையிலிருந்து செலுத்தப்படவுள்ளது.

இவ்வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையை நேரில் பார்ப்பதற்காக பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நேற்றிரவு சென்னை வந்தார், [சி]


## விசேட அறிவித்தல்

22-03-87ல் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக யூனியன் ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் லிமிட் புதிய முகவரிக்கு 25-3-87 முதல் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் புதிய முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**யூனியன் ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.,**

ACCOUNTANCY SYSTEMS & SERVICE
JAFFNA, LTD.

145, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 22750

[எ-3808]

A/L 89 பிரிவு - II
(விஞ்ஞான பாடங்கள்)

ஆரம்பம்: 28-03-87
(சனிக்கிழமை காலை 7-30 மணி)

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

7-30 — 8-30 — விலங்கியல்
8-30 — 9-30 — தாவரவியல்
9-30 — 10-30 — பௌதிகவியல்
10-30 — 11-30 — இரசாயனவியல்
11-30 — 1-30 — தூயபிரயோககணிதம்

குறிப்பு: பிரிவு I க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

விபரங்கட்கு:

New Master Institute
B. M. C Lane, Jaffna.
(எ-3600)



பிரயாண ஒழுங்கு

★ Canada
★ Australia ★ Germany
★ France ★ Italy

★ குறிப்பாக France, Germany, Italy ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் வெகுசீக்கிரத்தில் அழைத்துச் செல்ல உள்ளார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

எமக்கு வேறுகிளைகள் கிடையாது. எ-3588



பிரயாண ஒழுங்குகள்

அவுஸ்திரேலியா

குறைந்த கட்டணத்துடன் விமான ரிக்கற், ட்ரவலர் செக் ஆகியவற்றுடன் பயண ஒழுங்குகள் செய்து தரப்படும் குடும்பமாகவோ, தனியாகவோ பயணஞ் செய்யலாம்.

மற்றும் பாஸ்போட், BOND, ரிக்கற் பயணக் காசோலைகள் என்பவற்றிற்கும் தொடர்பு கொள்ளவும்.

ரஜீவன் ட்ரவல்ஸ்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[ஏ 3598] தொலைபேசி: 2 3 6 6 5



யாழ் நகரில் தரமான
காட்போட் (HARD BOARD)
நிதான விலையில்

எங்களிடம்
OIL TEMPERED - WATER RESISTANT
BANGNA

காட்போட் 8 அடி X 4 அடி X 1/10
மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

தீன்சன்ஸ்
DHEENSONS
சீமெந்து, கம்பி,
இரும்புப்பொருட்கள்
விற்பனையாளர்கள்

66, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழநாடு காரியாலயத்திற்கு முன்) [ஏ 3767]


## அபராதம்

பண்டத்தரிப்பு, திங்கள்

சில்லாலையிலுள்ள பேக்கரி ஒன்றில் நிறை குறைந்த பாண் விற்பனைக்கு விடப்பட்டிருந்ததை திடீர் பரிசோதனை ஒன்றின் மூலம் கண்டுபிடித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பிரதேச மருத்துவக் குழு பிரஸ்தாப பேக்கரி உரிமையாளருக்கு 500 ரூபாவை அபராதமாக விதித்தது.

பாண் நிறையில் 20 கிறும் குறைந்ததினுல் இந்த அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## பின்முற்றுகும் கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற பரந்தன் வேலுப்பிள்ளை வல்லிபுரத்தின் மரண சாதனமில்லாச் சொத்து விடயமாக

காலஞ்சென்றவர்.

வல்லிபுரம் கைம்பெண் சின்னத்தங்கம், D 5, பூநகரி வீதி, பரந்தன்.

மனுதார்.

இல: 243/T

எதிராக

1. வல்லிபுரம் தங்கராசா, குமரபுரம், பரந்தன்.
2. நல்லதம்பி வரதராஜன்
3. பெண் தங்கமணி இருவரும் கண்டி வீதி, பரந்தன்
4 நாகலிங்கம் இராமலிங்கம்
5. பெண் லோகநாயகி இருவரும் கண்டி வீதி, பரந்தன்
6. செல்லத்துரை கனகேந்திரன்,
7. பெண் பரமேஸ்வரி இருவரும் பழைய தபாற்கந்தோர் கண்டிவீதி, பரந்தன்
8. வல்லிபுரம் பாலசிங்கம்
9. வல்லிபுரம் விநாயகமூர்த்தி
10. வல்லிபுரம் தங்கேஸ்வரன்
11. வல்லிபுரம் சர்வேஸ்வரன் இவர்கள் D5, பூநகரி வீதி, பரந்தன்.

பிரதிவாதிகள்

மேலே சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனமில்லா சொத்து சம்பந்தமாக மேலே குறிக்கப்பட்ட இலக்க சொத்துறுதிசார் வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டு பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதி மன்றில் 1987ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி முற்பகல் 9 00 மணியளவில் மன்றில் சமுகம் கொடுத்து பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கக் கூடாது என்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்கள்.

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 28ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

**ஆ. குணநாயகம்,**
பதிவாளர்.

வரைவு:
**வீ.பொ.கார்த்திகேசு,**
மனுதாரின் சட்டத்தரணி.

1-12-86
காரணம் காட்டுவதற்காக 6-1-87க்கு நீடிக்கப்படுகிறது.

**ஆ.குணநாயகம்**
பதிவாளர்
22-12-86

19-2-87
காரணம் காட்டுவதற்காக 10-3-1987க்கு நீடிக்கப்படுகிறது.

மன்றின் கட்டளைப்படி
**ஆ.குணநாயகம்**
பதிவாளர்
25-2-87

10-3-87
காரணம் காட்டுவதற்காக 21-4-87க்கு நீடிக்கப்படுகிறது.

மன்றின் கட்டளைப்படி
**ஆ.குணநாயகம்,**
பதிவாளர்
(சி 8160) 12-3-87.

# "பல்கலைக்கழகம் ஒரு தேவலோகமல்ல"

உடுவில், திங்கள்

"பல்கலைக்கழகம் ஒரு தேவலோகம் அல்ல. அவ்வாறு நினைத்து அங்குவருவதும் புதிதாகவரும் மாணவர்களை இம்சிப்பதும் மாணவர்களால் கைவிடப்படவேண்டும்."

உடுவில் இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மதிய போசன விருந்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கலாநிதி இ. பாலசுந்தரம் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினுர்.

மாணவர் மன்றத் தலைவி செல்வி சி. சிவகங்கா தலைமையில் விழா நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி ஞா. சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது: "இப்பாடசாலை கலைக்காகமட்டும் சேவையாற்றவில்லை. விஞ்ஞானத் துறையிலும், வைத்தியத்துறையிலும் பல அறிஞர்களைத் தோற்றுவித்து வருகின்றது."

சிறப்பு விருந்தினர்களாக பங்குபற்றிய முன்னுள் அதிபர் திருமதி இ. அருணுசலம், சட்டத்தரணி ஆர். என். சிவப்பிரகாசம், வைத்தியகலாநிதி ஸ்ரீஜெயதேவி பொன்னுத்துரை ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உயர்தரமாணவன் செல்வன் ஜெயகாந்தன் சமமன்றம் சார்பில் உரையாற்றினுர்.

உயர்தர மாணவர் மன்றச் செயலாளர் செல்வி ஞா. மைதிலி நன்றி கூறினுர்.

## திருத்த வேலைகள்

[அச்சுவேலிநிருபர்]

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் ஆரம்பகால கட்டடம் ஒன்றை வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் 25 ஆயிரம் ரூபா செலவில் திருத்தி அமைத்துள்ளது.

இந்தக் கட்டடத்தை அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற அதிபர் எஸ் எஸ். துரைசிங்கம் திறந்துவைக்கவுள்ளார்.

## தமது பொருட்களையும் விற்கின்றனர்

பலாலி, திங்கள்

வறுத்தலைவிளான், கட்டுவன் பகுதியில் அச்சம்காரணமாக வீடுகளைவிட்டு வெளியேறிய மக்கள் குறைந்த விலையில் வீட்டு உடமைகள், கால்நடைகள் என்பனவற்றை விற்பனை செய்துவருகிறுர்கள்.

சிலர் தமது பொருட்களை அதே இடத்தில் வைத்து குறைந்த விலையில் விற்பனை செய்துவிட்டு செல்லுகின்றனர் இப்பொருட்களை குறைந்த விலையில் வாங்குவதற்கு பலர் பணமும் வைத்துக் கொண்டுகாத்து நிற்கின்றனர்.

விறகுத் தேவைக்காக பாரிய மரங்கள்கூட தறிக்கப்பட்டு லொறிகளில் ஏற்றிக்கொண்டு செல்லப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. 1000 ரூபா விற்பனை செய்யகூடிய மரங்கள் 300, 400ரூபாவுக்குக் கூட விற்கப்பட்டு வருகின்றன.

## வல்வை சிவகுரு வித்தியாசாலை சிறந்த பெறுபேறு

வல்வெட்டித்துறை, திங்கள்

யாழ். வல்வை சிவகுரு வித்தியாசாலை க. பொ. த. சாதாரணதர பரீட்சை சிறந்த முடிவுகளைப் பெற்றுள்ளது.

கடந்த 1986-ம் ஆண்டு முதல், வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற பலத்த தாக்குதல்களால் பெரும் சேதமடைந்து வகுப்புக்களை நடாத்தமுடியாத நிலையில் மேற்படி பாடசாலை விளங்கியது.

நெருக்கடியான, வசதியற்ற இச் சூழ்நிலையிலும் 1986 டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றிய இப்பாடசாலையின் 29 மாணவர்களில் 16 மாணவர்கள் க. பொ. த. (உயர்தர) வகுப்பில் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

ஏ. இளங்கதிர் என்னும் மாணவன் எட்டுப் பாடங்களில் அதி திறமைச் சித்தி (D) பெற்றுள்ளார்.

## பாடசாலைக்கு புதிய இடம்

பலாலி, திங்கள்

நிரந்தர இடம் ஒன்று பல மாதகாலமாக இல்லாதிருந்த தொண்டமானுறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திற்கு புதிய இடம் கிடைத்துள்ளது.

இராணுவ கெடுபிடியால் தொண்டமானுறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலம் மூடப்பட்டு தனியார் கல்வி நிலையம் ஒன்றில் செயல்பட்டு வந்தது. இக்கல்லூரியில் 1000 பிள்ளைகள் வரையில் கல்வி கற்கிறுர்கள். பாடசாலை அதிபர் எஸ் யோகச்சந்திரன் எடுத்துக்கொண்ட முயற்சியால் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியுடன் தொண்டமானுறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் இணைக்கப்பட்டுள்ளது. இக் கல்லூரிக்கு ஒரு நிரந்தர இடம் பெற்றுக் கொடுப்பதற்கு அகதிகள் புனர்வாழ்வு கழகமும் அயராது முயற்சித்தது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறைஅரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திருமதி பத்மாஜினி சிவதாசன், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## கல்வியின் நோக்கம்

மீசாலை, திங்கள்

"பல்கலைக்கழகஞ் செல்ல முடியாத மாணவர்களின் விரக்திமனப்பான்மையை நீக்கி சிறந்த கல்வி பெறுதற்கு தொழில் கல்வி மூலம் வழியுண்டு என்னும்புதிய வழியை காட்டும்பொருட்டே 1987ம் ஆண்டு தொழிற் கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1987 தொழிற் கல்வி ஆண்டு பற்றி கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அறிமுகம் செய்து வைத்துப் பேசும் போது சாவகச்சேரி வட்டார கற்றலுக்கும் அபிவிருத்திக்குமான மூலவள நிலையச் செயலாளர் திரு.வி. ரி. நடராசா இவ்வாறு கூறினுர்.

அதிபர் திரு க. பேரம்பலம் தலைமையில் தொழிற்கல்வி ஆண்டை அறிமுகம் செய்து பேசும் போது திரு. நடராசா கூறியதாவது:—"மனிதனை சுயமாகச் சிந்திக்கச்செய்து தனியாற்றல்களை வளர்த்து சமூக வாழ்வுக்கேற்ற முழுமனிதனுக்குவதே கல்வியின் நோக்கம் இப்பூரண மனிதன் சமூகநீதி, நாட்டுக்குகந்த நற்பிரஜை, பொருளாதார வளம் ஆகிய நலன்களை பெறுவதற்கு தொழிற்கல்வி கருப்பொருளாக அமைகிறது என்றுர்.

## சாம்பியனாக தெரிவு

[கிளிநொச்சி நிருபர்]

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் கிளிநொச்சிப் பகுதி விளையாட்டுக்கழகங்களிடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியப் பெண்கள் அணியினர் பெண்பிரிவு கரப்பந்தாட்ட சாம்பியனாக தெரிவானார்கள். ஆண்பிரிவு கரபந்தாட்ட சாம்பியனாக பாரதிபுரம் விளையாட்டுக்கழகம் தெரிவானது. எல்லேவிளையாட்டில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

## சித்திரப் போட்டி

உடுவில், திங்கள்

இலங்கை தேசிய ஒலிம்பிக் சபையின் பொன் விழாக் கொண்டாட்டங்களையொட்டி கல்வி அமைச்சின் ஆதரவுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான சித்திரப் போட்டியினை நடாத்தவுள்ளனர்.

12, 15 வயதுக்குட்பட்ட இரு பிரிவுகளாக இப் போட்டிகள் நடைபெறும் என்றும் மாவட்ட ரீதியிலான சித்திரங்கள் மார்ச் 30ம் திகதிக்குள் பெறப்பட்டு, மாவட்ட சித்திர அதிகாரி, வேறு மூவர் கொண்ட குழுவினால் பரிசீலிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் என்றும் 10 சித்திரங்களை ஒவ்வொரு மாவட்டங்களும் மத்திய பரிசீலனைக்காக அனுப்பிவைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறந்தவையாக தெரிவு செய்யப்படும் சித்திரங்களுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்கள் ஆகியன பரிசுகளாக வழங்கப்படவிருக்கிறது.

## கல்விஅதிகாரியின் மறைவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்.

''உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரியாக இருந்து பல்லாண்டு பணிபுரிந்ததின் மூலம் நெல்லியடி கல்விக் கோட்டத்தில் பிரதான பதவியை வகித்த திரு. வ. க. ஈசுரபாதம் கல்வி உலகில் நிதானமான கொள்கைகளைக் கடைப்பிடித்தவர். யாருக்கும் எந்த நேரமும் தன்னாலான உதவிகளைப் பரியவேண்டும் என்ற கொள்கையினர். சிறந்த சேவையே நாட்டின் செல்வம் என்பதில் உறுதியுடையவர். இதைமற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லும் நல்ல உள்ளம் படைத்தவர். நிதானமான சேவையினால் ஆசிரியர்கள் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றவர். கல்வித்திணைக்கள மேலதிகாரிகள், பெற்றோர்கள் மாணவர்கள் உள்ளிட்ட அனைவரதும் அமோகமான பாராட்டுதல்களைப்பெற்றவர்.

நெல்லியடி கல்விக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதத்தின் திடீர் மறைவை ஒட்டி பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. வ. க. ஈசுரபாதம் அவர்களது சேவையைக் கோப்பாய் வட்டாரமும் மன்னார்ப் பிரதேசமும் பெற்றிருந்த காலங்களில் அந்த இடங்களும் மிகமுன்னேற்றமடைந்தன. நல்லதைச் செய் அல்லது செத்துமடி என்பதைத் தாரக மந்திரமாக உடைய ஈசர் ஆரம்பத்தில் சிறந்த ஆசிரிய தொழிற்சங்கவாதியாகவும், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்குப் பக்கபலமாகவும் இருந்தார் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது'' என்று திரு. பஞ்சாட்சரம் மேலும் தெரிவித்தார்.

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

சித்த ஆயுள்வேதக் கல்லூரி விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் டாக்டர் வல்லிபுரம் சிவப்பிரகாசத்தின் சேவையைப் பாராட்டி மேற்படி கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சேவை நலன் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

இக் கல்லூரி அதிபர் டாக்டர் ஏ. வி. இராஜரட்ணம் இவ் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினார்.

டாக்டர்கள் ரோ. மகேஸ்வரன் சுந்தரமூர்த்தி, குஞ்சிதபாதம், [illegible]வாமதேவா, சிவசுப்பிரமணியம் ஆகியோரும் டாக்டர் சிவப்பிரகாசத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர். [ஓ]

## சட்டவிரோத மின்பாவனையை தடுக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பிரதேசத்தில் சுட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதால் இதனை தடுப்பதற்கு சகல சன சமூக நிலையங்களும் முன்னின்று பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் கடித மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்த சட்ட விரோத மின் இணைப்புகளை அகற்றும் பட்சத்தில் பட்டினம் இருளில் மூழ்கும் அபாயநிலையை தவிர்க்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாவற்குழி

## இராணுவமுகாம் பலப்படுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், செவ்

நாவற்குழி இராணுவ முகாம் மேலும் பலப்படுத்தப் பட்டுவருகிறது.

தினமும், அதிகாலை வேளையிலும், மாலை வேளையிலும் மூன்று ஹெலிகாப்டர்களில் இராணுவத்தினர் நாவற்குழி முகாமில் இறக்கப்படுகிறார்கள்.

ஹெலிகீழே இறங்கும்போது ஹெலியில் இருந்து சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதாலும், முகாமிலிருந்து ஷெல் பிரயோக மேற் கொள்ளப்படுவதாலும், கோப்பாய், கைதடி, அரியாலை மாம்பழம் சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மத்தியில் பதற்றநிலையும், பீதியும் ஏற்பட்டுள்ளது. (வா)

## பாடசாலை தோறும் சாரணர் இயக்கம்

கொழும்புத்துறை, திங்கள்

''யாழ். மாவட்டத்தில் சாரணீயம் ஆரம்பித்து 70 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமை மகத்தான சாதனையும், உண்மையான சேவையின் மகத்தான வெற்றியுமாகும். எனவே இவ்வாண்டைச் சாரணர் அபிவிருத்தி ஆண்டாகக் கொண்டாடிப் பாடசாலைகள்தோறும் சாரணர் இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும்'' என்று சாரணர் உதவி மாவட்ட (நிதி அபிவிருத்தி) ஆணையாளர் திரு. இ. தவகோபால் கேட்டுக்கொண்டார்.

நல்லூர் மங்கயற்கரசி தமிழ் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற குருளைச் சாரணர் பயிற்சிக் கருத்தரங்கில் பேசும் பொழுதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இக் கருத்தரங்கு உதவி மாவட்ட குருளைச் சாரணர் ஆணையாளர் திருமதி என். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

## சிறந்த சேவையாளர்

அமரர் சின்னத்தம்பி நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் சேவையாற்றி மக்கள் மனங்களில் இடம்பிடித்தவர்.

மண்கும்பான், வாதரவத்தை ஆகிய இடங்களில் அதிபராகக் கடமையாற்றி சமூகத்தின் எழுச்சிக்காக பெரிதும் பாடுபட்டார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மக்கள் சேவையே மகேசன்சேவை என்ற கூற்றுக்கிணங்க இன்முகத்துடன் சகலருக்கும் எச்சந்தர்ப்பத்திலும் தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் புரிந்தே வந்தார்?

'எம்மதமும் சம்மதம்' என்ற கோட்பாட்டை கடைப்பிடித்து அதன்படி வாழ்ந்தும் காட்டினார். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக.

ஞா. நதானியேல்

## இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 10- [1987-3-24]
கிழமை- செவ்வாய்
திதி- தசமி பி. இ. வரை
நக்ஷத்திரம்- உத்தராடம் பி. இ. வரை

மேடம்; மாதுருவழி ஆதரவிற்கு இடமுண்டு. நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

இடபம்: தொழில் துறையில் வெற்றியுண்டு. வீட்டிலும் புத்[illegible] மகிழ்ச்சிய[illegible] [illegible]வாக வாழ்க்கையில் நிம்மதிகிடைக்கும்.

[illegible]னம்: [illegible]மான வி[illegible]யங்களைப் பின்போடவும், உள் வீட்டிலேயே உளவு வேலை [illegible]பெறலாம், உசாராக இருக்கவும்.

கடகம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும், காதல் விவகாரம் தலைதூக்கும். சிலருக்கு பொதுத்துறையில் [illegible]பாடு முண்டு, அவதானம் வேண்டும்.

சிங்கம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும், எதிர்பாராத வகையில் சிக்கலில்மாட்டிக்கொள்ள நேரிடும், விபத்துக்கும் இடமுண்டு, அவதானம் வேண்டும்.

கன்னி: தந்தைவழிப் பெருமைக்கு தாராளமாக இடமுண்டு. நீண்டநாள் கனவு இன்று நனவாகும், பெரியவர்களின் ஆதரவும் உண்டு.

துலாம்: விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும், நீண்டநாள் பிணக்கு நிவர்த்தியாகும். சுபநாள்.

விருச்சிகம்: சிலருக்குப் புதிதாகத் தொழில்கிடைக்கும்: சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

தனுசு: தொழில்விடயத்தில் அதிக கவனம் வேண்டும், நண்பர்களின் சகவாசத்தால் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும், இன்று நடுநிலைமை நன்று.

மகரம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள், வாழ்க்கையில் சோர்வுக்கிடமுண்டு. சிறிய விஷபயத்திற்கும் இடமுண்டு.

கும்பம்: உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள், மேலிடத்து உறவு உற்சாகத்தையளிக்கும், பிதாவழிச் சுகமும் உண்டு.

மீனம்: போட்டி விவகாரங்களில் ஈடுபடுவீர்கள், சிலருக்குப் புதிதாகவும்தொழில் கிடைக்கும், அரசாங்க ஊழியராயின் ஆதரவுக்கு இடமுண்டு.

திருமலை ரவீந்திரன்

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் மயூரன்

ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த உதயகுமார் இந்திராதேவி அவர்களின் செல்வப் புதல்வன் மயூரன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (24-03-87) ஸ்ரீபவனத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா (அசோக்), [illegible] ஜேர்மன் ஆசையப்பா, பெரியத்தை மாமா, மச்சாள், மச்சான், லதாஅத்தை. பெரியம்மா, சித்தி அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(ஏ 8171)

சாவகச்சேரி

நகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1987-ம் ஆண்டு 1-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரியை 31-3-87ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பு இக்காரியாலயத்திற் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத்திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிடவளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%) ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக் காணிகளைச் சுவீகரிப்பதற்குச் சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே காணி உரிமையாளர்கள் உடனடியாக சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

க. நவரத்தினராசா

செயலாளர்

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.

[ஏ-3761]

O/L Dec. 87
DAY CLASSES
(முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்)
காலை 8-00 - பி.ப. 1-00
நாளை ஆரம்பம்
கடந்த வருட பரீட்சை பெறுபேறுகளில் அதிக நூற்றுவீத பெறுபேறுகளை பெற்றெடுத்த ஒரே ஒரு நிறுவனம்
THE EXPRESS INSTITUTE KOPAY
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை, கோப்பாய்.
[ஏ 3803]

KEEN CENTRE
88, பலாலி றேட், திருநெல்வேலி.
89 A/L
பொருளியல் — திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. வன்னியசிங்கம்
வர்த்தகம் — திரு. ரட்ணம்
அளவையியல் — திரு. S. S. மனோகரன்
இந்து நாகரீகம் — திரு. பாலா
தமிழ், அரசியல், புவியியல்
ஆரம்பம் 28-3-87 (சனி 3-00)
89 A/L
விஞ்ஞானம்
MATHS — திரு. நல்லையா
PHY — திரு. மணியம்
— திரு. சத்தியசீலன்
CHE — யாழ். பிரபல ஆசிரியர்
BOT — திரு. சர்வானந்தா
ZOO — திரு. நாகநாதன்
ஆரம்பம் 28-3-87 (சனி 4-00)
87 A/L 88 MATHS — திரு. ஈசன்
87 A/L வினாவிடை — SAT SUN 3-00
88 A/L — SAT SUN 1-00
ஆரம்பம் 28-3-87 சனி [ஏ 3806]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 24-3-87

# ● கோட்டை ராணுவத்தின் ஷெல்தாக்குதல் அனர்த்தம்

## பலியான இரு பொதுமக்கள்

யாழ்ப்பாணம் செவ்

யாழ் நகரில் நேற்று அதிகாலை நடந்த ஷெல் தாக்குதலில் பலியானவர்களில் ஒருவர் ஏருவூரைச் சேர்ந்த கே. தர்மலிங்கமாகும். இவருக்கு வயது 60. மற்றவர் யாழ் நகரைச் சேர்ந்த எம். ரவி 21 வயது.

யாழ் ஆஸ்பத்திரி கட்டடமொன்றின்மீது ஷெல் விழுந்த போதும் அது வெடிக்காததனல் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை: ற்றும்இரு இடங்களில் ஷெல் விழுந்துள்ளது. ஷெல் தாக்குதலினுல் நோயாளிகள் பெரும் பதட்டமடைந்துள்ளனர்.

முஸ்லிம் பகுதியில் ஷெல் தாக்குதலினுல் வீடுகள் சேதமடைந்தன. இருவர் காயமடைந்தனர். நாவாந்துறை பகுதியிலும் ஷெல் தாக்குதலுக்கு சில வீடுகள் சேதமாகின. கந்தர்மடத்தில் ஒரு வீட்டுக் கிணற்றுக்குள் ஷெல் விழுந்துள்ளது. (இ)

## முஸ்லிம் பகுதியை நோக்கியும் ஷெல்தாக்குதல்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்முஸ்லிம்பகுதியைநோக்கியும் நேற்று கோட்டையிலிருந்து ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல்களினுல் முஸ்லிம் பகுதியில் காயமடைந்தோர் விபரம்: ஹார்தீன் பைஸர் 6 வயது]. மபாஸ்அப்துல் அஸீஸ் [2 வயது], சுல்தான் 52 வயது], எஸ். எம். காத்தீன் [24 வயது], எம். ஏ. எச். ஹசீம் [24 வயது].

## யாழ். ஆஸ்பத்திரியில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். ஆஸ்பத்திரியை நோக்கியும் நேற்றிரவு ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினுல் யாழ். ஆஸ்பத்திரி 19-ம் வார்ட் மீது விழுந்த ஷெல் ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'எரிக்ராஜபக்ஸ' கடைக்கு முன்னுள் உள்ள மரவேரொன்றின் உள்ளே பாரிய ஷெல் ஒன்று வெடிக்காத நிலையில் சிக்கியுள்ளது.

## ஆயுர்வேத வைத்தியசாலை சேதம்

யாழ்யபாணம், செவ்.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினுல் யாழ். பெரியாஸ்பத்திரிக்கருகாமையிலுள்ள யாழ். மாநகர ஆயுள்வேத வைத்தியசாலையும் சேதமடைந்துள்ளது.

வைத்தியசாலை வளவில் ஐந்தடி ஆழமும், ஆறடி அகலமும் கொண்ட பல குழிகள்காணப்படுகின்றன.

இவ்வைத்தியசாலையின் மலசலகூடக் கட்டிடங்கள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் பின் மதிலும் உடைந்துள்ளது.

நேற்றுக் கடமைக்கென வந்த வைத்தியசாலை ஊழியர்கள் அச்சம் காரணமாக எவ்வித கடமைகளும் மேற்கொள்ளவில்லையென பிரதம வைத்திய அதிகாரி கே.பி. சண்முகரத்தினம் தெரிவித்துள்ளார்.

பிரதம வைத்திய அதிகாரி உட்பட ஐந்து உதவி வைத்தியர்களும் எட்டு ஊழியர்களும் கடமையாற்றும் இவ்வைத்தியசாலை முன்பும் பலதடவைகள் ஷெல் தாக்குதலுக்குள்ளானது. [ஓ]

## இருவர் காயம் வீடுகள் சேதம்

பலாலி நிருபர்

காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டலில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரும் ஹெலிகொப்டரும் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினுல் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கலட்டி ஆகிய பகுதிகளிலுள்ள வீடுகள் கடைகள் பலத்த சேதத்துக்குள்ளானதுடன் இருவர் காயமும் அடைந்துள்ளனர்.

## காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை 1-15 மணி தொடக்கம் 6-30 மணிவரை யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினுல் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 50 பேர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோரின் விபரம் வருமாறு:-

1. ஜெயந்தி-தவம் (வயது 20) கொன்வெற் வீதி. 2. செல்வராணி, கிருஷ்ண மூர்த்தி (வயது 24) கொன்வெற் வீதி. 3. காமாட்சி நாகலிங்கம் (வயது 36) கன்ஞதிட்டி 4. தங்கம்மா நவரெத்தினம் (வயது 70 கஸ்தூரியார் வீதி 5. மனோன்மணி வில்லியம் (வயது 70) கடற்கரை வீதி 6. சுல்தான்பீபி முகமட் (வயது 52) கஸ்தூரியார் வீதி 7. யசோதாதேவி (வயது 18) நாவலர் ரோட் 8. பத்மா அலோசியஸ் (வயது 32) நாவாந்துறை, 9. ஸ்ரெல்லா அப்பாத்துரை (வயது40) 2ம் குறுக்குத்தெரு. 10. அப்துல் அஸீஸ் அபிஸ் (வயது 3) ஜின்னுரோட் 11. ஆர். சசிகரன் (வயது 5) கொன்வென்ற் வீதி 12. ஆர்த்தீன் பைசல் (வயது 6) முஸ்லீம் வீதி 13. எம். எச். அஸீஸ் (வயது 24) பிரதான வீதி 14. இராமலிங்கம் தமிழ்வாணன் (வயது 12 ஐயஞர் கோவிலடி 15 மாணிக்கம் கிருஷ்ணமூர்த்தி (வயது 22) கொன்வெற் வீதி, 16. வேலாயுதம் யோகேஸ்வரன் (வயது 11) பலாலி வீதி 17. வேலுப்பிள்ளை தயாரன் (வயது 19) தெல்லிப்பழை 18. துரைசிங்கம் சுதாகர் (வயது 19) சுண்டுக்குளி, 19. இலங்கைநாதன் பாலகுமார் (வயது 22) சிவலிங்கப்புளியடி 20. குழந்தைவடிவேல் சக்திவடிவேல் வயது 27-சரவணை 21. இராசகோபால் உதயசிறி வயது 19-கொக்குவில் 22. ஒலிவர் வயது 22- யாழ்ப்பாணம் 23 சில்வெஸ்டன் வயது18-மன்னுர் 24 வி.நிசார் வயது 23 சண்டிலிப்பாய் 25 கோபி வயது26- யாழ். 26 பேபி வயது 21 யாழ். 27 அரிகன் வயது 23-யாழ் 28 இன்பம் வயது 20 யாழ் 29 கனகசபேசன் வயது 20 யாழ் 30 என். சுந்தர் வயது 26 யாழ் 31பூவன் வயது 23 யாழ் 32 சுதன் வயது 24 யாழ் 33 குபேரன் வயது 23 யாழ் 34 சிவா வயது 9 யாழ் 35 ரவிராஜன் [வயது 19) கொக்குவில், 36 ரவி (வயது 20) யாழ்ப்பாணம், 37. ரதன் [வயது 18], யாழ்ப்பாணம்] 38. முரளி [வயது24) யாழ்ப்பாணம், 39. வேவி (வயது 20] யாழ்ப்பாணம், 40. கிரன் (வயது 24] யாழ்ப்பாணம் 41. வெள்ளை[வயது 22] யாழ்ப்பாணம், 42. சந்தரன [வயது 17 யாழ்ப்பாணம், 43. அசோகன் [வயது 18] யாழ்ப்பாணம், 44, ராஜன் [வயது 22]யாழ்ப்பாணம். 45. குமார் [வயது 18) யாழ்ப்பாணம். 46 காந்தன் (வயது 24] யாழ்ப்பாணம் 47. பானு (வயது 22) யாழ்ப்பாணம் 48. அந்தோனி (வயது 21) யாழ்ப்பாணம் 49. கேசவன் (வயது 18) வல்வெட்டித்துறை 50 மணி (வயது 21) யாழ்ப்பாணம். (கு)


## யாழ். நகரில் பதற்றம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்.கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலைநடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக யாழ்.நகரில் நேற்று பதற்றம் நிலவியது.

பல வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாதபோதிலும் ஒரு சில கடைகள் ஒற்றைக்கதவில் திறந்திருந்தன.

யாழ்.ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு இயங்கிய போதிலும் நோயாளர் வெகு குறைவாக வந்திருந்தனர்.



பொலிஸ் விடுதி இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

## "இனிமேல் இராணுவம் தீவிரவாதிகளுக்கெதிரான தாக்குதலை எங்கும் நடத்தும்" — லலித்

[கொழும்பு]

ராணுவம் இனிமேல் முகாம்களில் முடங்கிக் கிடக்குமென்ற பேச்சுக்கே இடமில்லை. எவ்வேளையிலும் எங்கும் தீவிரவாதிகளுக்கு எதிரானதாக்குதலை நடாத்துமென்றுதேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர்இவ் எச்சரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில: இராணுவ நடவடிக்கை மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண அரசு விரும்பவில்லை. பேச்சு வார்த்தை மூலமே பிரச்னைக்குதீர்வுகாண வேண்டுமென்பதில் அரசு தொடர்ந்தும் முயற்சித்து வருகிறது. ஆனல் சில போராளிகள் குழுக்கள் இதற்கு தடையாக இருந்து வருகின்றன.

நாட்டின் ஒருமைப் பாட்டிற்காகவும் அனைத்து மக்களின் பாதுகாப்பிற்காகவும் இலங்கை இராணுவத்துடன் வெளிநாட்டுக் கூலிப்படை இணைந்து போராடுவது இவ்வேளையில் தவிர்க்கமுடியாது. எனினும் இவ்வாறுன நிலைகைமைகளில் நாம் எதனை வேண்டுமானுலும் செய்வோமென்று தெரிவித்துள்ளார்.

## பத்மநாபா உட்பட 23 பேருக்கெதிரான சதிமுயற்சி வழக்கு ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

இலங்கை அரசாங்கத்தை சதிப்புரட்சி மூலம் கவிழ்க்க திட்டமிட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஈ. பி, ஆர். எல். எவ். பொதுச் செயலாள பத்மநாபா உட்பட 23 பேருக்கெதிரான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் ஆரம்பமாகியது.

வன் செயல்கள் ஆயுதப் புரட்சி மூலமும் ஆயுதங்களைக் சேகரித்து வைத்தும் இராணுவ பயிற்சிக்கு இளைஞர்களை இந்தியாவுக்கு அனுப்பியதாகவும் அரசிற்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு அரசைக் விழ்க்க சதி முயற்சி செய்ததாகவும் இந்த 23 பேர் மீதும் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்களில் மூவர் தமிழர் ஒருவர் முஸ்லீம் மிகுதி 19 பரும் சிங்களவர்கள். எனினும் 23 பேரில் பத்து சிங்களவர் மாத்திரமே நேற்று நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். அவர்களிலும் எட்டுப் பேர் தம் மீதான குற்றப் பத்திரிகையை ஏற்க மறுத்தனர்

நேற்றைய விசாரணையின் போது இவர்களுக்கு எதிரான பல சாட்சியங்கள் தஸ்தாவேஜுகளும் மற்றும் சில ஆவணங்களும் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததையடுது விசாரணை அடுத்த மாதம் மூன்றும் திகதி குஒத்திப் போடப்பட்டுள்ளது. (சி)

## நாவற்குழியில் அதிகாலை ஹெலி ரோந்து மக்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாவற்குழி இராணுவ முகாமைநோக்கி நேற்று அதிகாலை 2-50 மணியளவில் ஹெலி கொப்டர் ஒன்று வந்ததைத் தொடர்ந்து கைதடி, கோப்பாய் பகுதி மக்களிடையே பெரும் பதற்றம் நிலவியது.

தொடர்ந்து மூன்று தடவைகள் பலாலிக்கும், நாவற்குழிக்குமிடையே ஹெலி ரோந்து நடைபெற்றதைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களைத்தேடி இரவிரவாக நகரத் தொடங்கினுர்கள்.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் இப்பகுதிகளைச் சுற்றி தாழப்பறந்து ஹெலிகொப்டர் நோட்டமிட்டுக் கொண்டிருக்க பொம்பர் விமானம் ஒன்று பலாலி நோக்கிச் சென்றதனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இது இவ்வாறிருக்க கைதடியில் கடந்த சனிக்கிழமை ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக அதிர்ச்சியடைந்து பெண ஒருவர் மரணமானுர்.

## நேற்றைய தாக்குதலில் 5படையினர்பலி, 6பேர் காயம் என அரசு தகவல்

கொழும்பு, திங்கள்

யாழ். பொலிஸ்விடுதிமீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஆறு பேர் காயப்பட்டதாகவும் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது

நேற்றுக்காலைமேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின்போது நீண்டதூர 82 மி. மி. மோட்டர்களை பாவித்ததாகவும் இத்தாக்குதலில் முதலில் 4 படையினர் கொல்லப்பட்டதாகவும் அறிவித்துள்ளது. 7 பேர் சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் அறுவர் படுகாயமுற்று இருப்பதாகவும் மேலும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

வேறொரு சம்பவத்தில் ஸ்னிப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஊ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389 — 24126.